செ.வெ.எண்:65 நாள்: 29.08.2018

**கரூர் மாவட்டம்**

**கிருஷ்ணராயபுரம் வட்டம், கட்டளை குறுவட்டம், சேங்கல் கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட நிறைவு நாள் விழாவில், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள் 214 பயனாளிகளுக்கு ரூ.11,83,960 மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

**அதன் விபரம் வருமாறு:**

கரூர் மாவட்டம், கிருஷ்ணராயபுரம் வட்டம், கட்டளை குறுவட்டம், சேங்கல் கிராமம், இந்திராணி மணி திருமண மண்டபத்தில் இன்று (29.08.2018) நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்ட நிறைவு நாள் விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன்,இ.ஆ.ப., அவர்கள், 214 பயனாளிகளுக்கு ரூ.11,83,960 மதிப்பில் நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் வேளாண்மைத்துறை, ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித்திட்டம், தோட்டக்கலைத்துறை, சுகாதாரத்துறை, கால்நடை பராமரிப்புத்துறை, மாவட்ட தொழில் மையம், உள்ளிட்ட பல்வேறு துறைகளின் வாயிலாக சிறு கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டு துறை சார்ந்த திட்டங்கள் குறித்து சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களால் பொதுமக்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:

பொதுமக்கள் அரசின் திட்டங்களை முழுவதுமாக அறிந்து கொள்ளவும், அரசின் திட்டங்களை முழுவதுமாக பெறுவதற்கு பயனாளிகள் எந்தெந்த துறை அலுவலகங்களை அணுக வேண்டும், எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என்றும் அனைவரும் அறிந்துகொள்ள இம்முகாம்கள் ஒரு வாய்ப்பாக அமைகின்றன.

நலத்திட்ட உதவிகளை பெறுவதற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும் என்பது குறித்த அனைத்து தகவல்களையும் சம்பந்தப்பட்ட துறையின் உயர் அலுவலர்களே இங்கு நேரடியாக வருகை தந்து எடுத்துக்கூறி, தங்கள் துறை சார்ந்த திட்ட விளக்க உரைகளை நிகழ்த்தி இருக்கிறார்கள். பொதுமக்கள் ஒவ்வொருவரும் இங்கு அமைக்கப்பட்டுள்ள அரசுத்துறையினர் அரங்குகளை பார்வையிட்டு நலத்திட்ட உதவிகளை கேட்டறிந்து உங்களுக்கு எந்த வகையில் அரசின் நலத்திட்ட உதவிகள் கிடைக்கப்பெற வேண்டும் என்பது குறித்து சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் விரிவாக கேட்டுத்தெளிவு பெற வேண்டும்.

வடகிழக்கு பருவமழை தொடங்கவுள்ள நிலையில் மானாவாரி பயிர்செய்யும் விவசாயிகள் அரசின் தரமான விதைகளை மானியத்தில் பெற்று மகசூல் செய்ய தயாராக இருக்க வேண்டும். அத்துடன் தங்களது விளைநிலத்தில் மண் பரிசோதனை செய்து அதற்கேற்றாற்போல் பயிர் செய்ய வேண்டும். இம்முகாம் மூலம் வருவாய்த்துறையின் சார்பாக பட்டா, சிட்டா சான்றிதழ் பெற்றுக்கொள்ளலாம். மழைநீரை சேகரிக்கும் அனைவரும் முன்வர வேண்டும். மழைக்காலம் தொடங்குவதால் டெங்கு காய்ச்சல் குறித்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். அரசு மருத்துவமனைகளில் தரமான மருத்துவர்களும், மருந்துகளும் உள்ளதால் அனைவரும் அதை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். 6 மாதத்திற்கு ஒருமுறை அனைவரும் அரசு மருத்துவமனையில் வழங்கும் குடற்புழு நீக்க மாத்திரையை உட்கொள்ள வேண்டும். மனிதர்களை போலவே கால்நடைகளுக்கும் குடற்புழு நீக்க முகாம் நடத்தப்பட்டு வருகிறது. வேலைவாய்ப்புத்துறையின் மூலம் வழங்கப்படும் திறன் வளர்ப்பு பயிற்சியை இளைஞர்கள் பெற்று அதன் மூலம் வேலைவாய்ப்பை பெற முன்வர வேண்டும்.

சேங்கல் ஊராட்சியில் பெறப்பட்ட 213 மனுக்களில் 210 மனுக்கள் ஏற்கப்பட்டு பொதுமக்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. மீதமுள்ள 3 மனுக்கள் பரிசீலனையில் உள்ளது. மேலும், மக்கள் தொடர்பு திட்ட முகாமில் இன்று பெறப்பட்ட மனுக்கள் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு உரிய நடவடிக்கை மேற்கொள்ள உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார்.

பின்னர் வருவாய்த்துறை சார்பில் இலவச வீட்டுமனைப்பட்டா 4 பயனாளிகளுக்கும், நத்தம் பட்டா நகல் 86 பயனாளிகளுக்கும், பட்டா மாற்றம் செய்து பட்டா வழங்குதல் 22 பயனாளிகளுக்கும், நத்தம் வீட்டுமனை செய்து தனிப்பட்டா ரூ.9,15,000 மதிப்பில் 61 பயனாளிகளுக்கும், வாரிசு சான்று 16 பயனாளிகளுக்கும், ஆண் வாரிசு இல்லை என்பதற்கான சான்று 1 பயனாளிக்கும், சிறு/குறு விவசாயி சான்று 11 பயனாளிகளுக்கும், மின்னணு குடும்ப அட்டை 6 பயனாளிகளுக்கும், நலிந்தோர் நலத்திட்டத்தின் கீழ் இயற்கை மரணம் உதவித்தொகை ரூ.40,000 மதிப்பில் 2 பயனாளிகளுக்கும், சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் முதியோர் உதவித்தொகை ரூ.1,20,000 மதிப்பில் 1 பயனாளிக்கும், தோட்டக்கலைத்துறை சார்பில் 2 பயனாளிகளுக்கு கொய்யா மற்றும் மாங்கன்றுகள், குழித்தட்டுநாற்றுகளும், வேளாண்துறையின் சார்பில் 2 பயனாளிகளுக்கு ரூ.1,08,960 மதிப்பில் மழைத்தூவான் மற்றும் துவரை விதைகளும், என மொத்தம் 214 பயனாளிகளுக்கு ரூ.11,83,960 மதிப்பிலான அரசு நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி எஸ்.கவிதா, வருவாய் கோட்டாட்சியர் (குளித்தலை) திரு.லியாகத், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் / சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் (பொ) திரு.த.குமரேசன், கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குநர் திரு.இளங்கோவன், சுகாதாரப்பணிகளின் இணை இயக்குநர் மரு.நிர்மல்சன், ஆதிதிராவிட நல அலுவலர் திரு.மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர் திருமதி ஜான்சி, மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திருமதி மல்லிகா, மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் திருமதி விஜயா, வட்டாட்சியர் திரு.சுரேஷ்குமார் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கரூர்.**